நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கோவில்பட்டி

**முன்னிலை – திரு. கி. ஆனந்த், எம்.எல்.,**

நீதித்துறை நடுவர் எண்.1, கோவில்பட்டி

2025 ஆம் வருடம் டிசம்பர் திங்கள் 17 ஆம் நாள் புதன்கிழமை

சி.ஆர்.எம்.பி.எண்.1705/2025

CNR. No. TNTT07-007639-2025

ஜான் கிங்ஸ்லி ரத்னராஜ் — மனுதாரர்

/எதிர்/

யுனைசி கெத்சியாள் ஜார்ஜ் விஜய வேதானந்த ராஜாமணி
மற்றும் ஒருவர் — எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது 17.12.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. T. சின்னமாரிமுத்து அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு மற்றும் ஆவணங்கள் ஆகியவை பரிசீலனை செய்து, மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டு, இது நாள் வரை இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, BNSS பிரிவு 173(4)ன் கீழ் கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் மனுதாரர் புகார் மனு மீது வழக்கு பதிவு செய்து விசாரணை செய்ய உத்தரவிடுமாறு மனுதாரரால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்**

1. எதிர்மனுதாரர்கள், நேர்மையற்ற முறையில் நகைகளை திருடி சென்ற குற்ற செயல்களில் ஈடுபட்டுள்ளார்கள்.

2. இதுசம்பந்தமாக மனுதாரர் கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையம் மற்றும் தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு புகார் மனு

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2025.12.17 19:40:47 +0530

அனுப்பியும், மனு ரசீது மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது. வேறு எந்த நடவடிக்கை எடுக்கவில்லை.

3. இதுவரை சட்டப்படி எந்த நடவடிக்கையும் எடுக்காததால் மனுதாரர் கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் கொடுத்த மனுவின் பேரில் வழக்கு பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொள்ள பி.என்.எஸ்.எஸ். பிரிவு 175(3)ன் கீழ் உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

4. மனுதாரரின் மனு, ஆவணங்கள் மற்றும் பிரமாணப்பத்திரம் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் தரப்பில் கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு நகல் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு புகார் மனு கொடுத்ததற்கான அஞ்சலக ரசீது மற்றும் காவல் நிலைய மனு ரசீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. மனுதாரர் பி.என்.எஸ்.எஸ். பிரிவு 173(4)–ன் படியான நடைமுறையை பின்பற்றி முறையாக காவல் அதிகாரிகளுக்கு புகார் கொடுத்துள்ளார். இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா என பார்க்கும் போது, மேற்படி மனு மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் இது எதிர்மனுதாரர்கள் மற்றும் மனுதாரருக்கிடையே உள்ள குடும்ப பிரச்சனை என்பதால் இம்மனுவில் முதல்நிலை விசாரணை செய்து அறிக்கை பெற வேண்டிய அவசியம் உள்ளது.

6. எனவே, மனுதாரர், கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் கொடுத்த மேற்படி புகார் மனுவின் அடிப்படையில் முதல்நிலை விசாரணை செய்து அறிக்கை தாக்கல் செய்ய கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய பொறுப்பு அலுவலருக்கு இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**இம்மனுவானது மேற்கண்டவாறு அனுமதித்து உத்தரவிடப்பட்டுகிறது.**

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2025.12.17 19:40:54 +0530

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 17 ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2025.12.17 19:40:59 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
கோவில்பட்டி.